வாக்குமூலம்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
சி.சி.எண்.139/20
வழக்கு சாட்சி – அ.சா.4

| | |
|---|---|
| பெயர் ஈஸ்வரன் | ஜாதி |
| தந்தைபெயர் | தொழில் |
| கிராமம் | சமயம் |
| தாலுக்கா | வயது |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.23

**( எதிரி ஆஜர். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் பிசிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்துவருகிறேன். கடந்த 21.11.19 அன்று மதியம் சுமார் 12.45 மணியளவில் நானும் எனது தம்பி ஜெயராமும், பிசிபட்டி வாட்டர் டேங்க் அருகே உள்ள டீக்கடையில் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். அப்போது எங்களது தெருவை சேர்ந்த சுந்தரம் என்பவர் டிவிஎஸ் எக்சல் வாகனத்தில் வடக்கிலிருந்து தெற்காக வந்துக்கொண்டிருந்தார். அப்போது அவருக்கு பின்னால் வந்த அரசு பேருந்து அதிகவேகமாக வந்து அவரது வாகனத்தின் மீது இடித்து விபத்தை ஏற்படுத்தியது. விபத்தில் சுந்தரம் என்பவருக்கு தலை, கை, கால்களில் இரத்தகாயம் ஏற்பட்டது. அதன்பின்னர் 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அவர் வீட்டிற்கு தகவல் தெரிவித்தோம். விபத்தை ஏற்படுத்தியவர் பற்றி விசாரித்த போது வீரபாண்டியை சேர்ந்த முருகேசன் என்று தெரிந்துக்கொண்டேன். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் கூறமுடியும். ஆஜர் எதிரி தான் பேருந்து ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியவர்.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

அசா1 கணேசன் நான் ஒரே தெருவை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அவரை எனக்கு சிறுவயது முதலே தெரியும். நான் தெற்கு ஜெகநாதபுரம் சுப்பிரமணிய சிவா தெருவில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். தேனி, பிசிபட்டி ரோட்டிற்கு மேற்கு பக்கமாக தெற்கு ஜெகநாதபுரம் சுப்பிரமணிய சிவா தெரு அமைந்துள்ளது. மேற்படி விபத்தில் இறந்த நபர் ரோட்டிற்கு கிழக்கு பக்கமாக உள்ள தோட்டத்திலிருந்து புல் அறுத்துவிட்டு வரும் போது விபத்து நடந்தது என்றால் சரிதான். சாட்சி மீண்டும் மேற்படி நபர் ரோட்டிற்கு கிழக்கு பக்கமாக உள்ள தோட்டத்திற்கு செல்லும் போது விபத்து ஏற்பட்டதாக கூறுகிறார். எதிரி ஓட்டி வந்த பேருந்து டவுன்பஸ் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் டவுன்பஸ் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். அந்த பேருந்து நிறுத்தத்தில் ஆட்களை இறக்கி, ஏற்றிவிட்டு வரும் போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் அதை நான் கவனிக்கவில்லை. நான் டாடா ஏசி வாகனத்தில் டிரைவராக இருந்தேன் என்றால் சரிதான். பொதுவாக தென்வடல் ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்காகவோ மேற்கிலிருந்து கிழக்காகவோ இருபுறமும்வாகனங்கள் வருகிறதா என்பதை கவனித்து கடக்கவேண்டும் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும, பொய் சாட்சி சொல்கிறேன்

என்றால் சரியல்ல. அசா1 கணேசனும் நானும் நண்பர்கள் என்பதால் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் சுந்தரம் என்பவருக்கு 65 வயது இருக்கும். அவருக்கு இருசக்கரவாகனத்தை ஓட்டி தெரியாமல் அவர் தான் ரோட்டின் குறுக்கே திடீரென வந்து ரோட்டின் நடுவில் உள்ள திட்டில் மோதி விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. அப்படி அவர் கிழே விழுந்ததால் தான் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரி பேருந்தை விபத்து நடந்தஇடத்திற்கு அருகில் உள்ள பேருந்து நிறுத்தில் பயணிகளை இறக்கிவிட்டுஏற்றிக்கொண்டு மெதுவாக தான் பேருந்தை இயக்கினார் என்றால் சரியல்ல. மேற்படி சுந்தரம் ரோட்டில் விழுந்துகிடந்ததை பார்த்து எதிரி வாகனத்தைநிறுத்தினார் என்றால் சரியல்ல. சுந்தரம் ஓட்டி வந்த வாகனத்தின் எண் TN 60 5106 ஆகும். இடையில் வரக்கூடிய ஆங்கில எழுத்து தெரியாது. அசா1 அவரது தகப்பனாரின் இறப்பிற்க நஷ்ட ஈடு பெறவேண்டும் என்ற எண்ணத்தில் எதிரி மீது புகார் கொடுத்துள்ளார் என்றும் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.